ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப்பள்ளி

கீழைச்சிவல்பட்டி

# ஆண்டு மலர்

**1957—58**



## ஆண்டு மலர் ஆட்சிக் குழுவினர்

தலைவர் :

வி. கோபாலகிருஷ்ணன்

ஆசிரிய உறுப்பினர் :

திரு. அரு. இராமலிங்கம்

,, எம். எம். எஸ். மாணிக்கம்

,, வி. சேஷாத்திரி

,, ஆர். எம். கணேசன்

மாணவ உறுப்பினர் :

அழ. நாகப்பன்

மு. முருகப்பன்

தெ. மணி

சீ. வீரராகவன்

# தேன் துளிகள்


| | | |
|---|---|---|
| பள்ளி வாழ்த்து | | 3 |
| கல்விக் கழகம் | | 4 |
| நமது ஆசிரியர்கள் | | 5 |
| அன்பிற்குரிய மாணவ மாணவிகள் | | 6 |
| S. S. L. C. Eligible List | | 7 |
| ஆண்டு அறிக்கை | | 9 |
| வள்ளுவரும் வீரமும் | பி. எஸ். சந்திர மோஹன் | 12 |
| செட்டியாரின் தந்திரம் | எஸ். தையல்நாயகி | 14 |
| நான் கேட்டதோர் சொற்பொழிவு | கரு. முத்தையா | 15 |
| ஏகம்ப வாணன் | இராம. தேனப்பன் | 17 |
| குடியரசு | எஸ். தண்டபாணி | 18 |
| மாணவர் ஒழுக்கம் | கி. நாராயணன் | 19 |
| தமிழ் முன்னேற வழி | என். நரசிம்மன் | 20 |
| கம்பனில் காதல் | மு. முருகப்பன் | 21 |
| விஞ்ஞானம் காட்டும் வழி | S. கோமளம் | 23 |
| போட்டிக்குப் போனேன் | கரு. அழகப்பன் | 25 |
| செவிச் செல்வம் | இராம. ஆறுமுகம் | 26 |
| உலக சமாதானத்தின் அவசியம் | லெ. அண்ணாமலை | 27 |
| உழைப்பால் உயர்ந்தவர் இயந்திர மனிதன் எடிசன் | மு. மங்கையர்க்கரசி | 29 |
| சிறு சேமிப்பு | இராம. வே. கருப்பையா | 31 |
| விகடத் துணுக்குகள் | ம. சந்தானம் | 32 |
| அம்மா ! அம்மா ! | கா. சொக்கலிங்கம் | 33 |
| தேய்ந்த கனவு | ம பழநியப்பன் | 35 |
| புலவரும் இயற்கையும் | எஸ். இராஜகோபாலன் | 36 |
| நோய்க்கு மருந்து | M. கருப்பையா | 38 |
| ஓவியம் | ஆர் பிச்சம்மாள் | 39 |
| விடுதலை ! விடுதலை !! விடுதலை !!! | கரு. மு. கருப்பையா | 41 |
| இரும்புப்பெட்டி | ந சுப்பிரமணியன் | 43 |
| பகுத்தறிவு | எஸ். விசுவநாதன் | 44 |
| எல்லோரும் டபாஸ் | சா. மு. சாத்தப்பன் | 45 |
| A Brave Son | S. Veeraragavan | 48 |
| How To Be Healthy | A. Sathivel | 49 |
| A Noble Boy | T. Narayanan | 49 |
| A Summer morning | A. Muthuarumugam | 50 |
| Be Kind to animals | S. Jayaraman | 50 |
| Prize Winners | | 51 |
| இலக்கியக் கழகப் பரிசுகள் | | 54 |

# பள்ளி வாழ்த்து

கலைமகள் அருளினால்
கனிதமிழ் வளத்தினால்
நிலைபெருந் திருவினால்
நிலாவுக கலாலயம்!

ஏட்டுக்கல்வி வீட்டுக்கல்வி
ஏற்றமாந் தொழிற்கல்வி
நாட்டுக்கல்வி ஓங்கியிங்கு
நல்லவீரர் வருகவே!

உடலுறுதி உள்ளுறுதி
உண்மையான நன்னடை
கடமைகாக்கும் திண்மையோங்கிக்
கண்மணிகள் வாழ்கவே!
கல்விநிலையம் வாழ்கவே!

அங்கயற்கண் அம்மையும்
அழகனும், முருகனும்
மங்கலம்பொழியக் கல்வி
மன்றம்பொலிக பொலிகவே!

சிறுமதுரை யூரிலே
பெருமதுரைச் சங்கம்போல்
அறுவகைச் சமயத்தின்
அறிவுப்பள்ளி வாழ்கவே!

— சுத்தானந்தபாரதியார்



## ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கல்விக் கழகம்

1 திரு எ. நா. காசிவிஸ்வநாதன் செட்டியார் - தலைவர்
2 „ அழ. அமு. கரு. காசிவிஸ்வநாதன் செட்டியார்
- காரியதரிசி & கரஸ்பாண்டெண்ட்
3 „ நா. சொ. கரு. சொக்கலிங்கம் செட்டியார்
4 „ க. தெ. நா. ராம. தெ. தேனப்ப செட்டியார்
5 „ மு. அழ. ஆரி. அழகப்ப செட்டியார்
6 „ அரு. க. கண்ணப்ப செட்டியார்
7 „ தெ. மு. கரு. க. இராமனாதன் செட்டியார்
8 „ சி. ராம. அழகப்ப செட்டியார்
9 „ எ. நா. மு. நா. நாராயணன் செட்டியார்
10 „ மு. ராம. ராம. சிதம்பரம் செட்டியார்
11 „ ராம. மு. சோம. முத்தப்ப செட்டியார்
V. கோபாலகிருஷ்ணன், B. A. L. T.
தலைமை ஆசிரியர் (Ex-officio)
12 „ மு. அழ. முரு பெரி. பெரியகருப்பன் செட்டியார்
13 „ மு. அழ. சுப. அழ. சுப்பிரமணியன் செட்டியார்
14 „ அ. அள. சொக்கலிங்கம் செட்டியார்
15 „ பழ. மு. சித. மு. காசிவிஸ்வநாதன் செட்டியார்
16 „ மு. முப. முத்துப்பழநியப்ப செட்டியார்
17 „ க. தெ. நா. தெ. மு. தேனப்ப செட்டியார்
18 „ அரு. க. வள்ளியப்ப செட்டியார்
19 „ மு. அழ. இராமநாதன் செட்டியார்
20 „ மு. சித. கிருஷ்ணப்ப செட்டியார்
21 „ க. தெ. நா. அ. தேனப்ப செட்டியார்
22 „ தெ. மு. கரு. சொ. தியாகராஜன் செட்டியார்
23 „ அ. பெரி. சு. சுப்பிரமணியன் செட்டியார்
24 „ வீர. சேதுராமன் செட்டியார்
25 „ நா. கி. நா. கி. கிருஷ்ணப்ப செட்டியார்
26 „ வ. சொ. வள்ளியப்ப செட்டியார்
27 „ ராம. பழ. அழ. அழகப்ப செட்டியார்
28 „ பெரி. சு. ராம. இலக்குமணன் செட்டியார்
29 „ நா. கி. வெ. வெள்ளையன் செட்டியார்
30 „ சித. கதிரேசன் செட்டியார்
31 „ மு. முத்துப்பழநியப்ப செட்டியார்
32 „ சிவ. இராமனாதன் செட்டியார்
33 „ லெ. முத்தையா செட்டியார்
34 „ சுப. மு. சித. முத்தையா செட்டியார்
35 „ சு. வெ. வி. முத்தரசப்ப செட்டியார்
36 „ நா. வயி. நா. நாராயணன் செட்டியார்
37 „ அ. வீர. அ. அங்கப்ப செட்டியார்
38 „ செ. ப. மு. சுப. சுப்பிரமணியன் செட்டியார்
39 „ கரு. மு. கரு. கருப்பன் செட்டியார்
40 „ S. V. S. அழகப்ப செட்டியார்
41 „ சித. பெரி. திட்டாணிச் செட்டியார்
42 „ பெரி. பழ. இராமசாமி செட்டியார்



அன்பிற்குரிய மாணவ மாணவிகளே !

உங்கள் மனம் சுனை நீர் போலத் தூய்மையானது. அதில் தீக்குணங்களான கறைகள் எளிதாகப் பற்றிக்கொள்ளும். அப்போது நீங்கள் உங்களது பெயர்களை எண்ணிப் பார்க்கவேண்டும். மாணவன் மாணவி என்னும் சொற்களால் அழைக்கப்படும் நீங்கள் அதற்கேற்றபடி வாழ்வில் நடந்து காட்ட வேண்டாமா ?

உங்களது இளமை உள்ளம் கடவுள் பக்திக்கும், கல்விப்பெருக்குக்கும் இடம் அளிக்கவேண்டும். உங்களது கை கால்கள் கடைமையைச் செய்யத் துடிக்கவேண்டும். உங்களின் வாய் நல்லன செய்வாரை வாழ்த்தவேண்டும். உடல் நாட்டின் உயர்வுக்கு ஓயாது உழைக்கவேண்டும். இறைவனுல் நமக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு செல்வமும் பிறர்க்குப் பயன்படுமாறு நீங்கள் வாழ்தல் வேண்டும்,

**வி. கோபாலகிருஷ்ணன்**

தலைமை ஆசிரியர்

# எஸ். எஸ். எல். ஸி. தேர்ச்சிப் பட்டியல் 1956—57.

1 PL. முத்து
2 R. ரெங்கராஜன்
3 R. கிருஷ்ணன்
4 KS. பிச்சுமணி
5 MR. அழகப்பன்
6 S. அலமேலு
7 R. செல்லம்
8 S. பிரான்ஸிஸ் விக்டர் செல்வராஜ்
9 S. கிருஷ்ணமூர்த்தி
10 S. லலிதா
11 M. முத்தையா
12 G. பிச்சை
13 SP. ராமசாமி
14 T. ரெங்கராஜன்
15 S. வில்லியம் துரைராஜ்

தேர்வுக்குச் சென்றவர்கள் 38 தேர்ச்சி பெற்றவர்கள் 15

சதவிதம் 39

| பாடங்கள் | சதவிதம் | |
|---|---|---|
| | மாகாணம் | பள்ளி |
| தமிழ் I | 52 | 54 |
| தமிழ் II | 46 | 53 |
| ஆங்கிலம் | 45 | 36 |
| கணிதம் (பொது) | 46 | 40 |
| கணிதம் (சிறப்பு) | 49 | 30 |
| விஞ்ஞானம் | 43 | 47 |
| சமூக அறிவு | 43 | 44 |




எமது ஊர் அங்கயற்கண்ணி அழகேசர்
ஆலயத்தின் ஓர் சிற்பம்.


## உயர்நிலைப் பள்ளிக்கு அயராது உழைக்கும் நிர்வாக உறுப்பினர்கள்



தலைவர்
திரு. எ. நா.
காசிவிஸ்வநாதன் செட்டியார்




செயலாளர்
திரு. அழ. அமு. கரு.
காசிவிஸ்வநாதன் செட்டியார்



முதல் செயலாளர்
திரு. மு. அழ. ஆரி.
அழகப்ப செட்டியார்

## உயர்நிலைப் பள்ளிக்கு அயராது உழைக்கும் நிர்வாக உறுப்பினர்கள்



திரு. நா. சொ. கரு.
சொக்கலிங்கம் செட்டியார்



திரு. க. தெ. நா. ராம. தெ.
தேனப்ப செட்டியார்




திரு. அரு. க.
கண்ணப்ப செட்டியார்



திரு. தெ. மு. கரு. க.
இராமனாதன் செட்டியார்

## உயர்நிலைப் பள்ளிக்கு அயராது உழைக்கும் நிர்வாக உறுப்பினர்கள்




திரு. சி. ராம.
அழகப்ப செட்டியார்




திரு. எ. நா. மு. நா.
நாராயணன் செட்டியார்



திரு. மு. ராம. ராம.
சிதம்பரம் செட்டியார்



திரு. ராம. மு. சோம.
முத்தப்ப செட்டியார்



விளையாட்டு விழாத் தலைவர்
உளம் மகிழ உரையாற்றும் காட்சி.



இசை நாற்காலி
எவருக்கு இசையுமோ ?



பெருவெற்றியாளரின்
பெருமிதத் தோற்றம்.



பானை பிடிக்கும் கை
யானைக்குக் கண் அளிக்கிறது.



வெற்றிப் பெருமையால்
வீறுடன் காட்சிதரும்
கட்டிளம் காளையர்.



உயிரைப் பணயம் வைத்துக்
கயிறிழுக்கும்
உயரிய வீரர்கள்.

உ

சிவமயம்

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் உயர்நிலைப்பள்ளி,

## கீழைச்சிவல்பட்டி.

# 1957—58 ஆம் ஆண்டு அறிக்கை



மீனாட்சி சுந்தரரின் மெல்லடிகள் யாம்போற்றி
தேனான கல்வி தினம்வளர்க்கும்—வானார்
தொடக்கநிலைப் பள்ளியுடன் தோன்றுமுயர் பள்ளி
அறிக்கை படிக்கின்றேன் யான்.

**சிந்தையில் வந்தனை செய்வோம்.**

மரம் நட்டவன் நீர் விடுவான் என்பது இந்நாட்டுப் பழமொழி. அன்று 1949ம் ஆண்டு இந்த உயர்நிலைப்பள்ளி உருவெடுத்துத் தோன்ற அரசாங்கத்தில் ரூ. 35000 சேமிப்புச் செய்யவேண்டிய நிலையில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்திலிருந்து ரூ. 20000 கிடைத்தது குறித்து பெருமகிழ்வுற்றோம். தனக்குரிய சேமிப்புப் பணத்தை தனிப்பட்டோரிடமிருந்தும் ஓரளவு பெற்று பூரண நிலை பெற்று வேலை செய்யத் தொடங்கிய இப்பள்ளி அரசாங்கம் தரும் மானியம் பற்றாமையால் பொருளாதாரத்துறையில் சிறிது இன்னலுற்றது. இந்நிலையில் இவ்வாண்டு மீண்டும் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானம் ரூ. 9000 தந்திருப்பதை நினைத்து நன்றி செலுத்துகின்றோம்.

**தொடக்கப்பள்ளி.**

இந்த உயர்நிலைப் பள்ளியைச்சார்ந்த தொடக்கப்பள்ளியில் 166 மாணவர்களும் 166 மாணவிகளும் ஆக 332 சிறுவர்கள் எண்ணும் எழுத்தும் இயல்

புறக் கற்று வருகின்றனர். இவர்களின் அறிவுப்பயிர் வளர 10 ஆசிரியர்களும் 1 ஆசிரியையும் கல்வி கற்பித்து வருகின்றனர். இங்கு கற்றுவரும் சிறுவர் சிறுமியர்க்குத் தோட்டத் தொழிலும், இலக்கிய உரையாடல் பயிற்சியும் இன்பப் பொழுதுபோக்காக அமைந்திருக்கின்றன. ஐந்து வகுப்புக்கள் கொண்ட இப்பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. கல்வியளித்தோர் கண் கொடுத்தோர் என்பதை எண்ணத்திற் கொண்டு யாரேனும் கட்டிடம் கட்டித்தந்தால் அவர்களது பெயரால் கட்டிடம் அமைக்கக் காத்திருக்கின்றேம்.

உயர்நிலைப்பள்ளி :-

இருக்கையும் இடமும் :- இவ்வூர் அள. மு. உள்ளிட்டார் விளையாட அனுமதி தந்திருக்கும் திடலில் விளையாட்டுக்கள் நடைபெறுகின்றன. சில ஆண்டுகளாக இருந்துவந்த வகுப்பறை பற்றுக்குறையைப் போக்க அரசாங்கம் அளித்த ரூ. பதினுயிரத்துடன் மேலும் வேண்டிய ரூபாய் பதினையாயிரத்தில் ரூ. பதினுயிரத்தை ரூ 2000 வீதம் அகம் கனிந்து அளித்த 1. திரு நா. கி. வெ. வெள்ளையப்ப செட்டியார், 2. திரு. தெ. மு. கரு சொ தியாகராஜன் செட்டியார், 3. திரு. நா. சொ கரு. சொக்கலிங்கம் செட்டியார், 4 திரு. சு. வெ. கதி. சிகப்பி ஆச்சி வித்தியா சாலையார் ஆகிய நால்வருக்கும், தருவதாக வாக்களித்திருக்கும் திரு. AL. சீனிவாசன் செட்டியார் அவர்களுக்கும், இக்கட்டிடம் கட்ட மீண்டும் அகமகிழ்வோடு இடம் உவந்தளித்த அள. மு. உள்ளிட்டாருக்கும் பள்ளியின் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம். மாணவர்கள், ஆசிரியர்களின் பெருக்கத்திற்கேற்ப இருக்கைகளும் (டெஸ்க்), அலமாரிகள் முதலியனவும் செய்ய ரூ. 2000 தேவைப்படுகிறது. இத் தொகை முழுதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அன்பளிப்பாக அளிக்க, பள்ளியின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட அன்பர்களை அழைக்கின்றேம்.

உலகியல் அறிவு :-

பல கற்றும் உலக அறிவில்லையேல் ஒரு பயனும் இல்லை என்பதை நினைத்து இங்குள்ள மாணவர்க்குப் பொது அறிவு புகட்ட இலக்கியக்கழகம், நுண்கலைக்கழகம், மாணவர் துணைப்படைப் பயிற்சி, குடி இயற் பயிற்சி, சாரணியம், விளையாட்டுக்குழு முதலியன நற்பணிகள் செய்து வருகின்றன.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் :-

நமது மாநிலக் கல்வியதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க உயர்நிலைப்பள்ளியிலும், தொடக்கப்பள்ளியிலும் கற்றுவரும் ஏழை மாணக்கர் சிலர்க்கு நடுப்பகல் உணவளிக்கும் திட்டத்தை நாங்கள் கொண்டுவந்தபோது இவ்வூர் சாதுக்கள் மடத்தின் உரிமையாளர்கள் முன்வந்து தாமே உணவளிப்பதாக ஒத்துக்கொண்டு, உயர்நிலைப்பள்ளி மாணவர் ஐந்து பேருக்கும், தொடக்கப்பள்ளி மாணவர் ஆறு பேருக்கும் நடுப்பகல் உணவளித்து வருகின்றனர். அவர்கட்கு எமது நன்றி. மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்த உண்டியல் கொண்டு பணஞ் சேர்ப்பது போன்ற திட்டங்களை ஏற்படுத்திச் செயலாற்றி வருகின்றேம்.

உழைப்பும் உயர்வும் :-

சென்னை அரசியலார் நடத்தும் ஆரும் படிவ பொதுத் தேர்வில் சென்ற ஆண்டு (1956—57) அதற்கு முந்திய ஆண்டுகளைக் காட்டிலும் மாணவர் தேர்ச்சித்தொகை குறைவு என்பதை நினைத்து நாங்கள் வருந்துகிறேம்.

சென்ற ஆண்டில் நாங்கள் பள்ளியில் பொறுக்குத் தேர்வில் (Selection Examination) மாணவரை நிறுத்தாமை ஒரு பெருங்குறை என நினைத்து அக்குறையை இவ்வாண்டு நிவர்த்தித்ததோடு மேலும் பல முயற்சிகளும் செய்து வருகிறோம்.

| ஆண்டு | தேர்விற்குச் சென்றவர் | தேர்ச்சி பெற்றவர் | சதவீதம் |
|---|---|---|---|
| 1951—52 | 31...... | 20 | $64\frac{1}{2}$ |
| 1952—53 | 30...... | 19 | $63\frac{1}{2}$ |
| 1953—54 | 28...... | 20 | $71\frac{1}{2}$ |
| 1954—55 | 39...... | 23 | 59 |
| 1955—56 | 35...... | 22 | 63 |
| 1956—57 | 38...... | 15 | 39 |

எங்கள் பள்ளியின் ஈடிலா வளர்ச்சி:-

1949-ம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாய் ஆக்கப்பட்ட இப்பள்ளி, அயர்வின்றிச் செய்துவரும் தொண்டால், பள்ளியில் மாணவர் தொகையும், ஆசிரியர் தொகையும் ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது என்பதை அகமகிழ்வோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

| ஆண்டு | படிவங்கள் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1949—50 | 1 முதல் 4 | 116 | 17 | 133 |
| 1950—51 | 1 முதல் 5 | 207 | 27 | 234 |
| 1951—52 | 1 முதல் 6 | 241 | 35 | 276 |
| 1952—53 | 1 முதல் 6 | 218 | 30 | 248 |
| 1953—54 | 1 முதல் 6 | 209 | 35 | 244 |
| 1954—55 | 1 முதல் 6 | 230 | 46 | 276 |
| 1955—56 | 1 முதல் 6 | 245 | 65 | 310 |
| 1956—57 | 1 முதல் 6 | 255 | 77 | 332 |
| 1957—58 | 1 முதல் 6 | 279 | 90 | 369 |

இவ்வாண்டு தலைமை ஆசிரியர் உள்பட 15 ஆசிரியர்களும், ஒரு ஆசிரியையும் ஆக 16 பேர் பணியாற்றி வருகின்றனர்.

நன்றி:-

வகுப்பறை கட்டுதல், நாடகம் நடித்தல், ஏழை மாணவர்க்கு இலவச உணவளித்தல், பள்ளியை இயக்குதல் முதலிய நற்செயற்கு அவ்வப்போது நிதிபல நல்கியும், பொருள் சில கொடுத்தும், உடலால் உழைத்தும் உதவிகள் செய்த உள்ளூர், அயலூர் அன்பர்கட்கும், போட்டிகளிலும், சொற்பொழிவுகளிலும் கலந்துகொண்ட அறிஞர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இக்கல்விக் கழகமாம் கண்ணை இமையெனக் காக்க உங்கள் எல்லோரையும் வேண்டிக்கொண்டு இந்த ஒன்பதாவது ஆண்டு அறிக்கையை உங்கள் முன் படைக்கின்றோம்.

கீழைச்சிவல்பட்டி,
19—2—1958.

தங்கள் அன்பிற்குரிய,

**அள. அமு. கரு. காசிவிஸ்வநாதன் செட்டியார்.**
பள்ளிச் செயலாளர்

**வி. கோபாலகிருஷ்ணன்.**
தலைமை ஆசிரியர்

# வள்ளுவரும் வீரமும்

பி. எஸ். சந்திர மோஹன், ஆறும் படிவம்

வள்ளுவர் சொல்லும் சொல் சிறியனவேயாயினும் அச் சொல்லிலே துள்ளும் அழகு நம் நெஞ்சை அள்ளும். அதன் உள்ளே உள்ள கருத்து நம் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் உண்மைத் தன்மை எதுவென அறிவ தால் நம் மதி துலங்கும். பரந்த மனப்பான்மை விளங்கும். சிறந்த குணப்பண்பு இலங்கும் என்றெல்லாம் கூறுவது குறளின் புகழில் குன்றி யளவேயாம். அது மருந்தாகவும் பயனளிக்கும் என்று கூறுவது சாலச் சிறந்ததாகும்.

தமிழ்நாடு செய்த தவப்பயனல் தோன்றிய வள்ளுவர் உலகத்தோ ருக்கு ஒழுக்கமுறை வகுத்த சான்றோர் வரிசையில் சிறந்த ஒருவராக வைத்து எண்ணப்படுகிறுர் என்பது நாமறிந்தது ஒன்றும். 'திருக்குறள் தமிழிலக்கியத்தின் தலைசிறந்த நூலாவதோடு மக்கட் சிந்தனையின் மிக்கு உயர்வாவதோடு தூய்மையானதுமான வெளியீடாகும்.

"எல்லாப் பொருளும் இதன்பா லுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"

என்னும் திருவள்ளுவ மாலையடிகள் குறளின் பெருமையைத் தொகுத்துக் கூறுகின்றன.

குடிமக்கள் எவ்வண்ணம் இவ்வவனியில் வாழ்வது என எடுத்துக் கூறி அதற்கோர் எல்லையமைத்தது மட்டுமல்லாது வீரத்திற்கும் விளிம்பு வைக்கிறுர் வள்ளுவர்.

மண்ணகத்திலே நின்று விண்ணதிர முழக்கம் செய்து மாற்றுனின் ஆற்றலை இகழ்ந்து 'வரட்டும் அவர்கள் என் வாள் வீச்சினுலேயே விரட்டு கிறேன். திரட்டுகின்ற படைகள் வேண்டாம், என்னுடைய உருட்டுகின்ற கண்களும் மிரட்டுகின்ற பார்வையும் போதும்" என்றெல்லாம் கூறியவன் போர்முரசு கொட்டும்போது செயிர்த்து நின்று சீறி எழுந்த மாற்றுனை மண்ணிலுருளச் செய்யும் உறையினின்றும் வாளை உருவி கூர்மை பார்க்கும் போது அதனை நோக்கி,

"ஐயோ என் பட்டு மேனியை தொட்டுவிட்டால் சொட்டுமே குருதி; கெட்டு விடுமே என் உடல் அழகு. வாட்டுமே வலி வேதனை, எட்டிநில் அடிபத்து" என்ற முனகலுடன், சொட்டுகின்ற கண்ணீரோடு வீட்டினுள்ளே தாழ்ப்பாள் போட்டுக் கொள்பவனு வீரன்? அத்தகையதோ வீரத்தன்மை? இல்லை, இல்லை, இவனே பேடி.

அதோ விக்கலுடனும், விம்மலுடனும் கூடிய சிங்க ஏறுவைப் பாருங் கள். அவனிருப்பதோ போர்க்களத்திலே. அழுகின்ற அவன் கண்களி னின்றும் வரும் கண்ணீர்த்துளிகள் விழுகின்றது பூமியிலே - ஏன்?

சூழ்ந்து நிற்கும் பகைவர்களுக்கு அஞ்சி வாழ்ந்து வந்தோமே சிறக்க; இன்று வீழ்ந்து விடுவோமே தோற்க, தாழ்ந்துபோவோமே இப்பகைவர்

களால் என, ஆழ்ந்த துயரத்தால் மூழ்கியதாலா அவன் கண்ணீர் வடிக்கிருன், உள்ளம் துடிக்கிருன்? இல்லே.

அவனே சிறந்த வீரன், தனது போர்த்திறமையால் பகைவர்கள் துள்ளி வீழ்வது கண்டு எள்ளிநகையாடுபவன். அருமையான காட்சி என அள்ளிப் பருகுவான் பெருமையாக, ஆனுல் அவனே இன்று சொரிகிருன் கண்ணீர்.

அவனது கனல்கக்கும் கண்கள் எதிரிகள் வேல் எறிந்தபோது இமைத்துவிட்டதாம்—திறந்திருந்த இமைகள் மூடித் திறந்துவிட்டதாம்—அவ்வண்ணம் நிகழ்வது தோல்விக்கு அறிகுறியாம்.

இத்திறம் வீரனுக்கு பத்திரம் அன்று, இது பேடித்தனம் என கொடு முழக்கம் செய்தது இதயத்திலே அவன் உள்ளக்குரல், எனவே, தான் தோற்றுவிட்டோமோ ஆற்றல் வலிபெற்றிருப்பினும் ஆண்மையற்ற பேடி ஆனேமோ என எண்ணியே கண்ணீரை மண்ணிலே சிந்துகிருன்.

என இப்படியான ஒரு காட்சியை காட்டி வீரம் எத்தன்மையது என ஒரு சிறிய குறளிலே வள்ளுவனர் விளக்குகிருர்.

“ விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்ரே வன்க, ணவர்க்கு.

அடுத்த ஒரு காட்சியிலே வேல் பிடித்த மற்ருெருவனே ஆற்ருத்துயர் கொண்டவனுக்கு மாருகவே காட்டுகிருர் ஒரே தன்மையான வீரத்தை விளக்க.

வேல் பிடித்த இவன் மகிழ்ச்சியிலே திளேத்திருக்கிருன். அதுவும் மட்டற்ற மகிழ்ச்சியோடு அப்படி என்ன அவனுக்கு அமர்க்களத்திலே பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது? மாற்ருர் மனம் தளர்ச்சியடைந்தவர்களாய்—கிளர்ச்சியுடன் ஊக்க உணர்ச்சியுடன் போர் செய்யும் இவர்களேக்கண்டு ஓடினுர்களா? அதைக் கண்டுதானு இவன் இங்ஙனம் மகிழ்ச்சியடைகின்ருன்? இல்லே அதைக்கண்டு அல்ல, பகைவர்களுக்கு பயந்து பாய்ந்து ஓடவில்லே. பின் எக்காரணம்? அக்காரணத்தை அழகான காட்சியாக தன் குறளோவியத்தில் பொருள் நிறைவுடன் பொருத்தியிருக்கிருர் பொய்யில் புலவர்.

அயலாளர்கள் தன் கண்ணனை பொன்னுட்டின்மீது படை எடுத்து வருவதாக செய்தி அறிவித்தார்கள். கேட்டதுதான் தாமதம் “அடுத்தவனின் விடுதலேயை கெடுத்துவிட அமர் தொடுத்துவரும் கயவர்களே! உங்களே எல்லாம் தடுத்து நிறுத்தி தகர்த்து குருதிகொட்டச் செய்யாவிடில் அங்கேயே படுத்துவிடுவேன் சாக்காட்டு உறக்கத்திலே என வேல் பிடித்துச் சென்ருன் களம் நோக்கி.

அங்கே பாய்ந்துவந்த வேழம் தன்னே வீறுகொண்டு எழுந்ததுமே அதனே மாய்ந்துமே போகச்செய்தான் தன் கைவேலால். அவனே இப்போது ஓய்ந்துவிட்டான். பகைவர்களின் பிணக் குவியலிலே நடந்து, நடந்து கால் அயர்ந்துபோனதாலா? இல்லே, இன்னும் வேருெரு வேழம் வருகின்றதே, அதன் வலியிழக்க வீச வேலில்லேயே கையில் என்பதால்.

கண்ணிமைக்கும் நேரத்திலே எண்ணிறந்த உடல்களேத் துளேத்துச் செல்லும் வேலில்லேயே என்பதனுல்தான் அவன் ஓய்ந்துவிட்டதாகத் தன்னே எண்ணிக்கொண்டான்.

அவன் அதைத் தேடுகிருன்—ஓடுகிருன், நாற்புறங்களிலும் வே காணப்படுமா? என்று நண்பர்களை நாடுவதா வேல் கேட்க என தயங்கு ருன். அவன் வாளாயிருக்க முடியாததால் கைகளைப் பிசைகிருன். மிகுந் ஆத்திரத்துடனே கையை உதறுகிருன். தன் விலாவில் ஏதோ வலி ஏ படுவதை உணர்ந்தான். அப்பொழுது தன் கை எதன்மேலோ பட்ட போன்ற உணர்ச்சி மேல்நோக்கி நின்ற பார்வையொடு கீழ்நோக்கிப் பார் தான் என்ன வியப்பு?

வேல் ஒன்று தன் விலாப்புறத்திலே புதைந்து கிடப்பதை அ பொழுதுதான் அவன் உணர்ந்தான். "எனது விலாவோடு இறுக அணை துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருக்கும் இந்த வேலைப் பாராதவனாய் சஞ் லம் கொண்டிருந்தேனே! இதில் வேறு வஞ்சினமும் மொழிந்தே என்னே அசட்டுத்தனம் எனக்கூறி அவன் தனக்கு வெளியேயும், உட னுள்ளும் புதைந்துகிடக்கும் அந்த வேலை தன் உடலிலிருந்து பிடுங்கின வெகு விரைவாக. அவன் உடலிலிருந்து பீரிட்டெழுந்தது குருதி. ஆன அவன் உள்ளத்தினின்று எழுந்தது எல்லை இல்லா மகிழ்ச்சி! 'தேடி ஓ னேனே, வந்தனையே எனை நாடி' எனப் பாடியும்விடுகிருன் அம்மகிழ்ச் யிலே. என்னே வீரம்!

இக்கருத்தை இரண்டடியிலே இனிமையுடனே இயற்றியிருக்கிருர்.

"கை வேல் களிற்ருெடு போக்கி வருபவன்
மெய் வேல் பறியா நகும்"

இதுபோல எண்ணற்ற வீரக்காட்சிகளை கண்முன் காட்டுவ செந்நாப்புலவனின் ஈரடிக்குறள், இதை எண்ணும்போது தமிழராகிய நா தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்ற எண்ணம் பிறப்பது இயல்புதானே!

---

## செட்டியாரின் தந்திரம்

எஸ். தையல்நாயகி, முதற்படிவம் 'ஆ

சென்னையில் ஒரு செட்டியார் இருந்தார். அவர் தொழில் வியாபாரம் அவரை 'கருப்பன்' என்று அழைப்பர். அவரது வியாபாரத்தினுல் மிகச் செல்வம் கிடைத்தது. அவர் வெளியில் ஏழைபோல நடிப்பார். இவரிடம் பணம் இருப்பதை சில திருடர்கள் கண்டுகொண்டனர். அவரது வீட்டில் தகுந்தசமயம் பார்த்து திருடத் திட்டமிட்டனர். ஒருநாள் ஐவர், அவ வீட்டுப்பரணில் ஒளிந்துகொண்டனர். செட்டியார் மிகுந்த தந்திரசாலி. மக்கள் அனைவரிடமும் பழக்கம் வைத்திருந்தார். ஐவர் இருப்பதை சப்தத்தில் கண்டு கொண்டார். "இவர்கள் ஒருவர், இருவர் இல்லை, ஐந்துபேர் இருக்கிருர்கள். இவர்களிடமிருந்து தப்புவது எப்படி? என்று நினைத்தார். பக்கத்து வீட்டில் போலீசார் இருக்கிருர்கள். அவர்களை அழைக்கச்சென்ருல் இவர்கள் ஓடிவிடு வார்கள்" என நினைத்தார். அவருக்கு ஒரு தந்திரம் தோன்றியது. உடனே திடீர் என்று "பாம்பு கடித்துவிட்டது" என்று அலறினர். ஊரிலிருந்த ஜனங்கள் அனைவரும் வந்தனர். இதைக்கண்ட திருடர்கள் நடுங்கினர்கள். செட்டியார் தைரியத்துடன் 'பாம்பு கடிக்கவில்லை, இதோ நிற்கும் திருடர் களைப் பிடிக்கவே இந்தவழி செய்தேன்" என்ருர். மக்கள் எல்லாரும் மகிழ்ச்சி யடைந்தனர். திருடர்களைப் பிடித்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்ருர்கள்.

# நான் கேட்டதோர் சொற்பொழிவு

கரு. முத்தையா, ஆறும் படிவம்.

இலக்கியக்கழகக் கட்டுரைப்போட்டியில் முதற்பரிசு பெற்றது.

முன்னுரை :

உலகத்தில் மனிதனைப் பிறந்த ஒவ்வொருவனும் கல்வி கற்று அதன் படி நடந்து இன்பம் எய்தி விண்ணுலகு அடைவது இயற்கை. ஆனல்

" கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக "

என்ற பொய்யில் புலவன் வாக்கிற்கு ஏற்றபடி நடப்பவரோ மிகக் கொஞ்சம். ஆனல் கற்றபடி நடக்காவிட்டாலும்கூட, கற்றவர் நடந்துகொள்ளும் விதத்தையாவது, கண்ணல் பார்த்து, காதால் கேட்டுப் பயன் பெறுவோம் என்று சொற்பொழிவு கேட்கப் போகலாம் என எண்ணினேன்.

அந்த நேரத்தில்:

என் மனத்திற்கு, மதுரைமாநகரில் தமுக்கம் மைதானத்தில் நடக்க விருக்கும் கூட்டம் நினைவு வந்தது. அக்கூட்டத்திலே குன்றக்குடி அடிக ளார் அவர்கள் தலைமைதாங்க திருக்குறள் முனுசாமி சிறந்த முறையில் பேசுவார்கள் என அறிவிப்பைக் கண்ணுற்ற நான்...

எண்ணிய எண்ணங்கள் :

இப்படியும் பேசுவோர் இவ்வுலகில் உளர் என்று அன்றுதான் தெரிந்துகொண்டேன். இனிக்கும் பேச்சு என்னும் தேன் விருந்து என் காதில் ஊற்றிக்கொண்டிருந்தது. எங்கும் ஒரே அமைதி. குண்டூசி விழுந் தால்கூட சப்தம் கேட்கும். இரவு பத்து மணி இருக்கும். பசியென்றும் பாராது, இரவு என்றும் பாராது என்போன்ற இளைஞர்களும், முதியோர் களும், தாய்மார்களும், கண் இமைக்காது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த னர். அவர்கள் அப்படியிருந்ததின் காரணம்,

" கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றயவை "

என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஒப்ப நடந்தார்கள் என்று எனது உள்ளம் எண்ணியது.

சொற்பொழிவின் சாரம் :

அடிகளார் பேச்சைப் பலமுறை கேட்டிருக்கிறேன், சலிப்பு என்பதே இல்லாமல், அவர் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றதொரு சீரிய கருத்தை சிறந்த முறையில் பேசினர். ஆம் அவர் சொல்வது உண்மை தானே. கடவுள் ஒருவர்தான். பல பெயர்களால் அழைக்கப்படுகிருர், வேறென்றும் வேறுபாடு இல்லை. உதாரணமாக நாடகத்தில் ஒருவன் பல பாத்திரங்களைத் தாங்கி நடித்தாலும் உண்மையில் அவன் ஒருவன்தானே. வேடத்தால் மாறுகிருன். அதுபோல் ஆண்டவனை எண்ணத்திற்கேற்றுற் போல உருவாக்குகிருர்கள். ஆனல் ஆண்டவன் ஒருவன்தான். இந்த

உயரிய கருத்தை அந்தச் சொற்பொழிவின் மூலம் தெரிந்துகொள்ளும் வாய்ப்பைப்பெற்ற எனது உள்ளம் இன்னும் இன்பம் பெறுகிறது. ஒன்றே குலம் என்று அடிகளார் கூறினர். ஆம் அது உண்மைதான். சாதி சமயப் போராட்டங்கள் ஒழிந்துவரும் இந்நாளில் அக்கருத்திற்கு அதிக மதிப்பு உண்டு. உலகத்தில் மனித ஜாதி என்ற ஒன்றுதான் இருக்கவேண்டும். ஒவ்வொருவர் உடம்பிலும் ஒரே இரத்தம் ஓடுகிறது. கருப்போ, சிவப்போ மாறி ஓடவில்லை. நிறத்தால் குலம் பிரித்தலோ, மதிப்பால் குலம் பிரித்தலோ கூடாது என்று இற்றைக்கு முன் வாழ்ந்த புத்தர்பிரானே கூறிச்சென்றார். அதையே நமக்கு வலியுறுத்தினர் அடிகளார். காந்தியடிகளும் கருப்பர், சிவப்பர், அந்தணர், பறையர் என்ற வேறுபாடு இன்றி பழகச்சொல்லி சென்று மறைந்தார். இந்தக் கருத்துக்களைச் சொற்பொழிவு மூலம் கேட்ட நான் சாதி சமயச் சார்பற்று வாழ்வோம் என எண்ணினேன்.

**திருக்குறள் முனுசாமியின் தேன் விருந்து :**

நகைப்பு ! ஆம் நகைத்து இன்பமடையவேண்டும். நகைக்க வாய்ப்புக் கிடைப்பது இயற்கையாக சில சந்தர்ப்பங்களில்தான். ஆனல் முனுசாமியின் பேச்சைக் கேட்கக்கேட்க நகைப்புத்தான் வருகிறது. அடிகளாரது ஆழ்ந்த கருத்திலே அயர்ந்துபோன நான் முனுசாமியின் நகைச்சுவைப் பேச்சிலே யும் மூழ்கிவிட்டேன்.

**முனுசாமி அவர்களது சொற்பொழிவின் சாரம் :**

'' மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து ''

என்ற குறட்பாவின் கருத்தை அழகிய முறையில் எடுத்துச்சொன்னர். அனிச்சப் பூ சுருங்கிக்கொள்வதைப்போல விருந்தினரைப் பார்த்தவுடன் முகத்தை மாறுபடுத்திக்கொண்டால் விருந்தினர் முகம் சுருங்கி உண்ணுமலே சென்றுவிடுவர். இதிலிருந்து நாம் விருந்தினரைக் கண்டதும் புன்முறுவலுடன் வரவேற்க வேண்டும் என்று தெரிந்துகொள்கிறோம்.

'' எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு ''

ஆம் ! வள்ளுவன் விண்ட வாக்கு உயர்ந்ததுதான். எந்த நன்றியை மறந்தாலும் செய்த உதவியை அதாவது

'' காலத்தினல் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது ''

என்று சொல்லுமளவு செய்த உதவியை மறந்தால் அப்பழியை விட்டு நீங்க மார்க்கம் இல்லை என்று அன்னர் கூறினர்கள். ஆம் நாம் நம் செம்மை வாழ்வை அடைய வழிகாட்டியாக இருக்கிறது அன்றோ.

'' வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து ''

பொருளற்ற ஏழைகளுக்கு உதவுவதே உதவி செய்தல் என்றும், மற்றவர்களுக்குக் கொடுப்பது பிரதி உபகாரத்தை நோக்கிக் கொடுப்பது என்றும், இதிலிருந்து ஏழைகளுக்குக் கொடுப்பதுதான் உயர்ந்த அறம் என்றும் நாம் தெரிந்துகொள்ளுமாறு அன்னர் அழகாய்க் கூறினர்கள். இவ்வாறு எண்ணற்ற சிறந்த கருத்துக்களை மனத்திலே இறுத்தி வாழ்க்கையைச் செம்மை

யுற நடத்தவேண்டும் என்று அன்று நான் சொற்பொழிவு கேட்குங்கால் எண்ணினேன்.

முடிவுரை :

இதுகாறும் கூறியவற்ருல் சொற்பொழிவின் பயன் தெரிந்து அதன் படி நடந்தால் நம்மினும் உயர்ந்தோர் உளரோ! இல்லை என்ற பதில்தான் கிடைக்கும்.

" உலகத்தொடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார் ".

என்றபடி இன்று உலகம் போகின்ற போக்கில் கேள்விச் செல்வம்தான் வேண்டியதிருக்கிறது. பொதுவாக ஒரு பெரிய ஆசிரியர் எழுதிய நூலைப் படிப்பதைக்காட்டிலும் அன்னுர் பேசும் பேச்சைக் கேட்டால் அதன் பயன் மிகுதிப்படும். எனவே நாம் எத்துணை படித்தபோதிலும் சான்ருேர்களின் சிறந்த சொற்பொழிவைக் கேட்டு உள்ளம் பூரித்து இன்பமடைவதே பொருத்தமாகும் என எனது சிறிய உள்ளம் எண்ணுகிறது.

---

# ஏகம்ப வாணன்

இராம. தேனப்பன், முதற் படிவம். 'இ'

உறையூர் என்பது ஒரு உன்னதமான நகரம். அங்கே செல்வமிக்க சீமான் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் பெயர் வாணன். அவனுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. உடனே தாய் இறந்து விட்டாள். பலநாட் களுக்குப்பிறகு தந்தையும் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

வாணனின் பண்ணையாளான ஏகன் என்பவன் அக்குழந்தையை எடுத்து அன்புடனே அமுதூட்டி வளர்த்தான். குழந்தைக்கு ஆறு வயது நிரம்பியது. கல்வி கற்க கல்வியில் பெரிய கம்பரை நாடினன். பிள்ளையை அவரிடம் ஒப்படைத்தான்

பையனுக்கு வயது ப்திறு நிரம்பியது. நல்ல அறிவாளியானன். மகாபண்டிதன் எனப் பெயர் வாங்கினன். ஏகனது அன்புகண்டு பையனின் மனங்களித்தது. கம்பரின் கருணைகண்டும் பரவசம் அடைந்தது. அதனை அவன் எவ்விதம் காட்டுவது ? அவர்களின் பெயரைத் தன்பெயராக வைத்துக் கொண்டான். ஏகனது பெயரை அவன் முதலில் கொண்டான், கம்பரின் பெயரை அத்துடன் சேர்த்தான். தந்தையின் பெயரை முடிவில் வைத்தான். அதுகாரணமாக அவன்பெயர் ஏகம்பவாணன் என்று ஆயிற்று.

அவன் கல்வி, செல்வம் இரண்டிலும் சிறந்துவிளங்கினன், குணமும் ஒழுக்கமும் அவற்ருேடு குடிகொண்டன. புலவர்களை அவன் போற்றினன். ஏழைகளை ஆதரித்து தமிழை வளர்த்தான். அவன் வெகுநாட்களுக்கு முன் இருந்தவன். அவன் பெயர் இன்றும் நிலைத்திருக்கிறது.